பாரதிதாசன் பல்கலைக்கழகம்

தேர்வுநெறியாளர் அலுவலகம்

(தொலைக்கல்வி மற்றும் இணையவழிக்கல்வி மையம்)

திருச்சிராப்பள்ளி- 620 024

முனைவர். B. ஜெயபிரகாஷ் M.L.I.Sc.,M.Phil., Ph.D.,
தேர்வுநெறியாளர் (பொ)

அலுவலகம்: 0431-2407027 (extn.210)
மின்னஞ்சல்: cde.exams@bdu.ac.in
இணையதளம்: www.bdu.ac.in/cde

ந.க.எண்: தொ.க மற்றும் இ.வ.க.மையம் U.G (அல்பருவம்) தேர்வுகள்/ நவம்பர் 2026/ நாள்: 20.11.2026

அறிவிப்பு

பாரதிதாசன் பல்கலைக்கழகம் தொலைக்கல்வி மற்றும் இணையவழிக் கல்வி மையத்தில் U.G மற்றும் (அல்பருவம்) பட்டப்படிப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு நவம்பர்-2026 தேர்வுகள் நடைபெறவுள்ளன. தேர்வு விண்ணப்பத்தினை பல்கலைக்கழக இணையதளத்தின் (https://oms.bdu.ac.in/examform/) **வாயிலாக** பூர்த்திசெய்யுமாறும் மேலும் தேர்வு கட்டணத்தை **(Online Payment Receipt)** இணையதளத்தில் பதிவு செய்யுமாறும் கேட்டுக்கெள்ளப்படுகிறது. தேர்வுக்கான கட்டண விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ.எண்	இனங்கள் விபரம்	கட்டணம்
1.	விண்ணப்பப் படிவ செயலாக்கக் கட்டணம் **(Application Processing Fees)**	**Rs. 75/-**
2.	மதிப்பெண் பட்டியல் கட்டணம்	**Rs. 150/-**
3.	எழுத்துத் தேர்வுக் கட்டணம் (தாள் ஒன்றுக்கு)	**Rs. 125/-**
4.	செய்முறைத் தேர்வுக் கட்டணம் (தாள் ஒன்றுக்கு), இளநிலை பருவம் **(3 hours)**	**Rs. 150/-**
5.	செய்முறைத் தேர்வுக் கட்டணம் (தாள் ஒன்றுக்கு), **B.Sc. Chemistry**	**Rs. 300/-**
6.	திட்டக் கட்டுரை கட்டணம் **(Project work fees) B.C.A**	**Rs. 300/-**
7	இறுதியாண்டு மாணவர்கள் மட்டும் **01.** கூட்டு மதிப்பெண் பட்டியல் கட்டணம **02.** தற்காலிகச் சான்றிதழ் கட்டணம்	 **Rs. 300/-** **Rs. 300/-**

தேர்வு விண்ணப்பங்களைக் கால தாமதக்கட்டணமின்றி இணையதளத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள்	**18.12.2026 (வெள்ளி**
18.12.2026 தேதிக்கு பிறகு கால தாமதக்கட்டணத்துடன் ரூ. 300/-இணையதளத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள்	**28.12.2026 (திங்கள்)**
28.12.2026 தேதிக்கு பிறகு கால தாமதக்கட்டணம் மற்றும் கூடுதல் கால தாமதக்கட்டணம் (300+**500**= ரூ.**800**) இணையதளத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள்	**04.01.2027 (திங்கள்)**
U.G எழுத்துத்தேர்வுகள், திட்டக்கட்டுரை, மொழி தேர்வுகள் மற்றும் செய்முறைத்தேர்வுகள் தொடங்கும் நாள்	தேர்வு அட்டவணை பல்கலைக்கழக இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும்

-தா.தி.பா-

மாணவர்களுக்கான குறிப்புகள்:

1. இணைய வழியாக தேர்வு விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் போது (**https://oms.bdu.ac.in/examform/**) **இணைய வழியாகவே** தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். தேர்வு விண்ணப்பத்திற்கான இணைய பக்கத்தில் கட்டணம் செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது. அதில் ஏதும் தடைகள் இருப்பின் **(www.bdu.ac.in/cde)** என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள **"Online Payment"** என்ற முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.
2. **தேர்வுக் கட்டணம் "Online Payment" முறையில் கட்டணம் செலுத்தும் போது EXAM FEES என்ற முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். மற்ற முறையில் செலுத்தும் கட்டணம் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**
   இணையவழி தேர்வு கட்டணம்:https://formbuilder.ccavenue.com/live/bharathidasan-university-distance-education (அல்லது) https://www.onlinesbi.sbi/sbicollect/icollecthome.htm?corpID=903046 என்ற இணையத்தின் மூலமாக செலுத்தப்பட வேண்டும். கட்டணம் வகை (Category) : Exam. இந்த முறையில் தேர்வுக் கட்டணம் செலுத்தியிருப்பின், தேர்வு விண்ணப்பத்தினை இணையவழியாக சமர்ப்பிக்கும் போது கட்டணம் செலுத்திய விவரங்களை பதிவிட வேண்டும்.
3. **மாணவர்கள் நவம்பர்-2026 தேர்வு விண்ணப்பத்திணை பதிவு செய்து கட்டணத்தை செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.**
4. மாணவர்கள் அந்தந்த பருவத்திற்குறிய அனைத்துத் தாள்களுக்கும் கட்டாயமாக பதிவு செய்து தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டும்.
5. மாணவர்கள் தேர்வு எழுதும் தாள்களின் தலைப்பு (Title of the paper) மற்றும் அதற்குரிய பாடக் குறியீடு (Subject Code) பல்கலைக்கழக இணைய தளத்தில் (www.bdu.ac.in/cde/subject_codes.php) பார்த்துக் கொள்ள வேண்டும்.
6. இரண்டாம் பருவம் மற்றும் இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மாற்றுச் சேர்க்கை (Transfer Admission) மூலமாக தொலைக்கல்வி மற்றும் இணையவழி கல்வி மையத்தில் சேர்ந்தவர்கள் தத்தம் நிலுவைத் தாள்களை (Arrear Papers) தாங்கள் ஏற்கனவே பயின்ற கல்லூரிகளிலேயே தேர்வு விண்ணப்பம் பெற்று தேர்வு எழுதி முடித்துக் கொள்ள வேண்டும்.
7. மாற்றுச் சேர்க்கை மாணவர்கள் பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுச் சேர்க்கை ஆணை (Transfer Admission Order) மாற்றுத்தாள் மற்றும் கூடுதல் தாள் (Alternative/Additional paper) ஆணையின் நகல்களையும் மற்றும் மீளப்பயிலுதல் (Re-doing), மறு சேர்க்கை (Re-admission) மாணவர்கள் பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகல்களையும் தேர்வு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
8. **தேர்வு கால அட்டவணை, தேர்வு மையங்கள் குறித்த அறிவிப்பு மற்றும் பிற அறிவிப்புகள் பல்கலைக்கழக இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.**
9. **தேர்வு நுழைவுச் சீட்டு (Hall Ticket) பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து தேர்விற்கு குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் மாணவர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**
10. **UG பாடபிரிவில் 2022 நாட்காட்டி ஆண்டுக்கு முன்பு சேர்ந்த மாணவர்களுக்கு UGC கால வரையறையின் படி (Uniform Spam Period) தேர்வு எழுத இயலாது என தெரிவிக்கப்படுகிறது.**
11. *** பட்டப்படிப்பு முடிக்கப்பட வேண்டிய கால வரையறை தொடர்பான UGC அறிவுரைகள் www,bdu.ac.in/cde இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.**
12. **தேர்வு விண்ணப்பங்களை இணையதளத்தில் கடைசி தேதிக்கு முன் பதிவேற்றம் செய்யும்மாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**
13. **2026 ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கான முதல் பருவத்தேர்வு (I Semester) விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**

தேர்வு நெறியாளர் (பொ)